மதியம் 1 மணிக்கு அன்னதானம் ஆகியவை நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை பூத்துறை கண்டன் சாஸ்தா கோவில் சேவா சங்கம் மற்றும் விழா குழுவினர் செய்துள்ளனர்.



## மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# இருபெரும் விழா

குழித்துறை, ஜன.29-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இந்திய குடியரசு தினவிழா, கல்லூரி ஆண்டு விழா மலர் வெளியீட்டு விழா ஆகிய இருபெரும் விழா நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் பால்ராஜ் தலைமை தாங்கினார். போதகர் ராஜலின் ஜெயந்திரன் பிரார்த்தனை செய்தார். துணை முதல்வர் விஜி வரவேற்று பேசினார். தொடக்கத்தில் கல்லூரி தாளாளர் தேசியக்கொடி ஏற்றி வைத்தார். விழாவில் கல்லூரி ஆண்டு விழா மலரை தாளாளர் ராஜதுரை வெளியிட, முதல்வர் பெற்றுக்கொண்டார். ஆண்டுவிழா மலரை பேராசிரியர் ஜோஸ்பால் அறிமுகம் செய்து வைத்து பேசினார். விழாவில் என்.சி.சி.மாணவர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. இதில், கல்லூரி ஆட்சிமன்ற குழு உறுப்பினர் சாம் சுந்தரம் மற்றும் பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர். முடிவில் என்.சி.சி. தலைவர் கேப்டன் பாயிட் வெஸ்லி நன்றி கூறினார்.